# பத்திரிக்கை செய்தி

செ.வெ.எண்: 90/செப்டம்பர்/2011 நாள்: 30.9.2011

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளாட்சி சாதாரணத் தேர்தல்கள் எதிர்வரும் 17.10.2011 மற்றும் 19.10.2011 ஆகிய தினங்களில் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளது.

இத்தேர்தல்களுக்கு மொத்தம் 2401 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட உள்ளன. இந்த 2401 வாக்குச் சாவடிகளுக்கும் வாக்குப்பதிவு பொருட்களை கொண்டு செல்லவும், வாக்குச் சாவடிகளிலிருந்து பொருட்களை மீளப் பெற்று வாக்கு எண்ணும் மையங்களில் ஒப்படைத்திடவும் மொத்தமாக 184 மண்டலங்கள் உருவாக்கப்பட்டு மண்டல அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மண்டல அலுவலர்களுக்கான சிறப்பு பயிற்சி நாளை சனிக்கிழமை (1.10.2011) அன்று மாலை 5.00 மணிக்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெறவுள்ளது. இந்த பயிற்சியில் அனைத்து மண்டல அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ப.மகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.